# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM I

8073050

C

1. District : மாவட்டம் நாமக்கல்  PS: காவல்நிலையம் ஊ.த.த. பிரிவு  Year: ஆண்டு 2019  FIR No: மு.த.அ. எண் 08/AC/2019  Date நாள் 15-06-2019

2. (i) Act சட்டம் The P.C. Act 1988 as amended  Sections பிரிவுகள் 7A
   (ii) Act சட்டம் by the Prevention of Corruption  Sections பிரிவுகள்
   (iii) Act சட்டம் (Amendment) Act 2018  Sections பிரிவுகள்
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 2019 ஏப்ரல் மாதம் ஒரு நாள்
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை 14-06-2019 மாலை சுமார் 5 மணிக்கு 15-06-2019 காலை சுமார் 8 மணிக்கு
   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15-06-2019  Time : நேரம் பகல் 14.00 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-II 15-06-2019  Time : நேரம் பகல் 14.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் டைப் செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் செம்மேடு சுமார் 45 கி.மீ கிழக்கு முத்துக்காப்பட்டி சுமார் 10 கி.மீ கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. விஜயகுமார்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. முத்துசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது-39  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் –  Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி பழையபாளையம், அரியூர் நாடு கிராமம், கொல்லிமலை வட்டம், நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. கார்மேகம், கிராம உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, If required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Nonapplicable 15.6.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
15/06/19

Name பெயர் A.T. [illegible]
Rank நிலை ...................... No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
இ.பா.த.க. பிரிவு, நாமக்கல்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.06.2019 மாலை 17.15 மணி

* GCP-248-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

E. [illegible] HC 1101
15/06/19

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/AC/2019 u/s 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 15.06.2019-ஆம் தேதி சனிக்கிழமை பகல் 14.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், அரியூர்நாடு கிராமம், புதுவளவில் வசிக்கும் முத்துசாமி என்பவரின் மகன் திரு.M.விஜயகுமார் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் M.விஜயகுமார் (வயது-39), S/o. முத்துசாமி, புதுவளவு, அரியூர் நாடு, கொல்லிமலை தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, நாமக்கல். நான் கொல்லிமலை தாலுக்கா, அரியூர் நாடு கிராமம், புதுவளவில் எனது மனைவி சாரதா, மகன்கள் சிவானந்த், ஆதித்யன் ஆகியோருடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயத்தொழிலும், கிணறு வெட்டும் தொழிலும் செய்து வருகிறேன். நான் 5-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் போடுவேன். எனது அப்பா முத்துச்சாமி, அம்மா செல்லம்மாள் ஆகியோர் தனியாக எங்கள் ஊரில் குடியிருந்து வருகின்றனர். நானும், எனது அண்ணன் இளங்கோவனும் 2002-ல் அரியூர் நாடு கிராமத்தில் உள்ள சுமார் 3.71 ஏக்கர் விவசாய பூமியை கொல்லிமலை, அரியூர்நாடு கிராமம், ஆடுவாங்குட்டி பட்டியில் குடியிருக்கும் சோத்த வெள்ளையம்மாள் மற்றும் புதுவளவில் குடியிருக்கும் எருமைய எளையம்மாள் வகையறாவிடமிருந்து விலைக்கு வாங்கினோம். அதை வாழவந்திநாடு கொல்லிமலை முகாம் சப்ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவு செய்து கொண்டோம். 2004-ல் எங்களது பெயரில் பட்டா வாங்கினோம். எனது அண்ணன் இளங்கோவன் சுமார் 7 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். எனது அண்ணன் வாரிசுகளாக அவரது மனைவி ராணி, மகன்கள் தீபக், சந்தோஷ்குமார், அம்மா செல்லம்மாள் ஆகியோர் பெயர்களில்

வாரிசு சான்று வாங்கினோம். அவர்கள் புதுவளவில் குடியிருந்து வருகின்றனர். எங்கள் நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய அவ்வப்போது வி.ஏ.ஓ. அலுவலகம் சென்று திரு.மாதேஸ்வரன் வி.ஏ.ஓ. அவர்களை பார்த்து வந்தேன். அவர் பட்டா மாற்றம் செய்து கொள்ளலாம் என்று சொல்லி இழுத்தடித்து, சாக்கு போக்கு சொல்லி வந்தார். சேந்தமங்கலத்தில் உள்ள பட்டறையில் எனது டீவீலரை வேலைக்கு விட்ட போது, சேந்தமங்கலம் கிராம உதவியாளர் சாமுவேல் என்பவர் எனக்கு அறிமுகமானார். 2018-ல் அவரிடம் எங்கள் நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய மனு கொடுப்பது பற்றி விபரம் கேட்டேன். அவர் எனக்கு எல்லா அதிகாரிகளையும் தெரியும், நான் உனக்கு ரெகமண்ட் செய்து உனது நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றி கிராம ரெஜிஸ்டர்களிலும் பெயர் ஏற்றித் தருகிறேன் என்று சொன்னார். அதனால் நான் அவரிடம் சொத்து சம்மந்தமான அசல் பத்திரங்களை கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்டு, என்னிடம் அப்ளிகேசனில் கையெழுத்து வாங்கிச் சென்றார். அப்போது அவர் பணம் செலவாகும், பெரிய அதிகாரிகளை கவனித்தால் தான் பைலில் கையெழுத்தாகும் என்று சொன்னார். நான் பட்டா வாங்கிக் கொடுங்கள் சார், பிறகு பார்க்கலாம் என்று சொன்னேன். அதன் பிறகு 2019 ஏப்ரல் மாதம் ஒரு நாள் செம்மேட்டில் எனக்கு பட்டா பெயர் மாறுதல் உத்தரவை திரு.சாமுவேல் கொடுத்தார். அப்போது அவர் என்னிடம் உங்களுக்கு பட்டா வாங்க உங்கள் கிராம வி.ஏ.ஓ., கொல்லிமலை தாலுக்கா ஜோனல் டெபுடி தாசில்தார்(DT) மற்றும் மேலதிகாரிகளுக்கு நிறைய பணம் செலவாகியுள்ளது. அவர்களிடம் உன்னைப்பற்றி சொல்லித்தான் பட்டா பெயர் மாறுதல் ஆர்டர் வாங்கியுள்ளேன். அதனால் என்னிடம் ரூ.3 லட்சம் பணம் கொடுத்துவிடு என்று கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்று சொன்னேன். அதற்கு அவர் நான் கொல்லிமலையில் மற்றவர்களிடம் பட்டா மாறுதல் செய்து கொடுக்க ஏக்கருக்கு ரூ.2 லட்சம் பணம் வாங்கி வருகிறேன், உனக்கு 3¾ ஏக்கர் நிலம் உள்ளது, நீ தெரிந்தவன் என்பதால் உன்னிடம் ரூ.3 லட்சம் பணம் கேட்கிறேன் என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை சார் என்று சொன்னேன்.

அதற்கு அவர் பட்டா வாங்கிவிட்டால் மட்டும் போதுமா, நான் சொன்னால் தான் உங்கள் கிராம ரிக்கார்டுகளில் வி.ஏ.ஓ. ஏற்றுவார், இல்லையென்றால் உனது பட்டா கேன்சல் ஆகிவிடும் என்று சொன்னார். நான் பார்க்கிறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் அவர் அடிக்கடி என்னிடம் செல்போனில் பேசி பணம் கேட்டு வந்தார். நான் என்னிடம் தற்போது பணம் இல்லையென்று சொல்லி வந்தேன். சேந்தமங்கலத்திலும், முத்துக்காபட்டியிலும் அவர் என்னை நேரில் பார்த்த போது ரூ.3 லட்சம் பணம் கேட்டார். நான் அப்போதும் அவ்வளவு பணம் இல்லையென்று சொன்னேன். சாமுவேல் அவர்கள் அவரது செல்போன் எண் 9944059337-ல் இருந்து எனது செல்போன் எண்.7200604868-க்கு அழைத்தது மிஸ்டு கால் இருந்ததால், 14.06.2019-ஆம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு நான் அவரை செல்போனில் தொடர்பு கொண்டேன். அப்போது நான் கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்றும், விவசாயத்தில் அவ்வளவு வருமானம் இல்லையென்றும் எனது குடும்ப கஷ்ட சூழ்நிலையைச் சொன்னேன். அதற்கு அவர் இப்போது அவ்வளவு பணம் உன்னிடம் இல்லையென்றால் முதலில் ரூ.30,000/- பணம் ரெடி செய்து எனக்கு கொடு, நான் கொல்லிமலை தாலுக்கா ஜோனல் DT-க்கும், உங்கள் வி.ஏ.ஓ.-க்கும் பணம் கொடுக்க வேண்டும், அவர்களிடம் உங்களுக்கு பணம் வாங்கிக் கொடுக்கிறேன் என்று சொல்லித்தான் உனக்கு பட்டா வாங்கிக் கொடுத்தேன், மீதிப்பணத்தை பிறகு ரெடி செய்து எனக்கு கொடு, அப்போது தான் உனது பட்டா கிராம ரெக்கார்டுகளில் ஏறும் என்று சொன்னார். அதற்கு நான் நேரில் வந்து உங்களை பார்க்கிறேன் சார் என்று சொன்னேன். அதனால் 15.06.2019-ஆம் தேதி காலை சுமார் 8.00 மணியளவில் நான் முத்துக்காபட்டி சென்று அவரை நேரில் பார்த்து எனது குடும்ப சூழ்நிலையை சொன்னேன். அதற்கு அவர் ரூ.30,000/- பணம் ரெடி செய்து எனக்கு கொடு, நான் கொல்லிமலை தாசில்தார் ஐயாவுக்கும், ஜோனல் DT-ஐயாவுக்கும், வி.ஏ.ஓ-க்கும் பணம் கொடுக்கணும் அப்போது தான் வி.ஏ.ஓ. உனது பட்டா மாறுதல் ஆர்டர் கிராம ரெக்கார்டுகளில் கணக்கில் ஏறும் என்றும்,

பட்டாவை கிராம கணக்கில் ஏற்றி சிட்டா நகல் வாங்கித் தருகிறேன் என்றும், அசக்காட்டைச் சேர்ந்த இராஜேந்திரன் என்பவருக்கு பட்டா மாறுதல் ஆர்டர் வாங்கிக் கொடுக்க 80,000/- வாங்க வேண்டும் என்றும், உனக்கு பட்டா வாங்கி கொடுத்தற்கான பணம் நான் கொல்லிமலை தாலுக்கா அதிகாரிகளுக்கு செட்டில் செய்தால் தான் அடுத்து இராஜேந்திரனுக்கு பட்டா ரெடி செய்து வாங்க முடியும் என்றும், அதனால் பணம் ரூ.30,000/-ஐ முதலில் ரெடி செய்து கொடு என்று சொன்னார். நான் பார்க்கிறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்துப் பார்த்தேன். எனது பட்டாவை கிராம ரெக்கார்டுகளில் ஏற்றிக் கொடுக்கவும், சிட்டா நகல் பெற்றுக் கொடுக்கவும் சாமுவேல் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.30,000/- கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட கிராம உதவியாளர் சாமுவேல் அவர்களை அவர் கேட்ட லஞ்சப் பணம் ரூ.30,000/-த்துடன் நாளைக்கு சந்திக்க உள்ளேன். அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம்-xxx (M.விஜயகுமார்) 15.06.19.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப் பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத் தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய் மொழியான ஒப்புதல் பெற்று இன்று 15.06.2019-ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.08/AC/2019, u/s 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

15/06/19

(A.T. ஜெய்குமார்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.